Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 403/2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS –1**

| | | | |
|---|---|---|---|
| Name: | சதீஷ்குமார் | Calling: | வியாபாரம் |
| Father's Name: | பூபாலன் | Religion: | |
| Village: | கோட்டை | Age: | 43 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 14.11.2025 நேரம் : 02.45 PM

(எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

பு.சா.1 குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். எனக்கும் எதிரிக்கும் எத்தனை ஆண்டுகள் பழக்கம் என்றால் 5 வருடம் பழக்கம். எதிரியானவர் என்னிடம் கடன் வாங்கும் போது எவ்வித கடனுறுதி சீட்டு மற்றும் ஆவணங்கள் கொடுத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியும் நானும் லிப்ட் ஒர்க் மூலமாக தான் பழக்கம் என்றால் சரிதான். அந்த வியாபாரம் தவிர வேறு ஏதும் பழக்க வழக்கமும் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு எனது வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நான் சொல்லிதான் அவர் அனுப்பினார். நான் சொல்லிய விவரங்களை தான் வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு எதிரி கொடுத்த

காசோலையை எனது பெயருக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான், என்னுடைய வேறு ஒரு கம்பெனி பெயரில் கொடுத்தார். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கார்த்திக் ஆலோபிரிக்ஸ் என்ற நிறுவனத்தின் பெயருக்கு தான் காசோலை கொடுத்தார் என்றால் சரிதான். எதிரி சுதாகர் அவர் பெயரில் எந்தவித காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல் செய்து வருவதால் நான் கொடுத்த கடனை அதில் காண்பித்திருப்பிருப்பேன் என்றால் சரிதான். அது சம்மந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் காண்பிக்க தயாராக உள்ளேனா என்றால் சரிதான். கார்த்திக் ஆலோபிரிக்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரில் தான் எதிரி கொடுத்த காசோலையை டெபாசிட் செய்தேன் என்றால் சரிதான். நான் உண்மையிலேயே எதிரிக்கு பணம் கொடுத்திருந்தால் என்னுடைய பெயரில் தான் காசோலையை வாங்கிருப்பேன் என்றாலும் நிறுவனத்தின் பெயரில் வாங்கியிருக்க மாட்டேன் என்று சொன்னால் நிறுவனத்தின் பெயரில் தான் நான் எதிரிக்கு பணம் பரிவர்த்தனை செய்தேன். எதிரிக்கு எனது நிறுவனத்தின் கணக்கில் இருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு பணம் பரிவரித்தனை செய்தேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ எனது முதன்மை சாட்சியத்திலோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சென்னால் சரிதான். எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும் எந்த ஒரு காசோலையையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் அவர் பணம் செலுத்த கடமைபட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. அவர் என்னிடம் உண்மையிலேயே கடன் வாங்கிருந்தால் அவரிடம் இருந்து கடனுறுதி சீட்டோ, ஆவணமோ வாங்கியிருப்பேன் என்று சொன்னால் நான் வங்கி கணக்கின் மூலம் பரிவர்த்தனை செய்ததால் வாங்கவில்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

(எதிரிதரப்பு குறுக்கு விசாரணை செய்தபோது அவர் கேட்ட சில விவரங்கள் பற்றி தெரிந்துக்கொள்ள புகார்தாரர் தரப்பு மறுவிசாரணைக்கு அனுமதிக்கோரியதின் பேரில் அனுமதிக்கப்பட்டது.)

புகார்தாரர் தரப்பு மறுவிசாரணை

கார்த்திக் ஆலோபிரிக்ஸ் நிறுவனம் என்னுடையது, சதீஷ்குமார் என்று என்னுடைய பேரில் தான் உள்ளது. நிறுவனம் என்னுடைய பேரில் இருப்பதால் இவ்வழக்கை போட்டுள்ளேன். நான் யாருடைய பெயருக்கு பணம்

கொடுத்தேன் என்றால் ஆக்னா லிப்ட் நிறுவனத்திற்கு. எதிரிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு தரவில்லை.

எதிரிதரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை.

ரிட்டன் மெமோ கார்த்திக் ஆலோபிரிக்ஸ் பெயரில்தான் வந்துள்ளது, எனது பெயரில் வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சதீஷ்குமார்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2025.11.14 15:23:46 +0530